# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## O.S. NO.37/2016

**20.07.2023 - வா.சா. 1 மகாலட்சுமி சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கேபில் டி.வி அலுவலகம் 1ம் பிரதிவாதியின் சொத்தில் அமைந்துள்ளது என்றால் அது பொது சொத்தில் அமைந்துள்ளது. அந்த சொத்து என் மாமனாரின் பெயரில் உள்ளது. அந்த அலுவலகத்திற்கு ஆரம்பத்தில் ரூ. 3000/- கொடுக்கப்பட்டு தற்போது ரூ.5000/- வாடகை என்று சொன்னால் சரியல்ல. அந்த அலுவலகத்திற்கு மின் கட்டணம் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை ரூ.2500/- வருகிறது என்று சொன்னால் எனக்கு தெரியாது.

கேபிள் டி.வி அலுவலகத்தில் மொத்தம் 4 பேர் வேலை செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. ஒரே நபர் சங்கர் என்பவர் வேலை செய்து வருகிறார். ஏற்கனவே 4 பேர் வேலை செய்து வந்தார்கள் என்றும், கடந்த 2 ஆண்டுகளாக 3 பேர் நின்று விட்டதால் தற்போது சங்கர் மட்டும் வேலை செய்து வருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி சங்கருக்கு மாதச் சம்பளம் ரூ.12,000/- கொடுத்து வருவது எனக்கு தெரியாது. நான்கு கேபிள் டி.விக்கும் தனித்தனியாக வருமானவரி செலுத்தப்பட்டு வருவது எனக்கு தெரியாது. 2004 வரை கேபிள் டி.வி. வருமானத்தை நான் பெற்றுக் கொண்டேன். 2004 பிப்ரவரி மாதத்தில் இருந்து வருமானத்தை கொடுக்க வேண்டும்.

கேபிள் டி.வி யின் செலவு போக மீதி வருமானத்தை தான் கணக்கிட்டு கொடுக்க முடியும் என்றால் சரிதான். அந்த தொகையையும் 1ம் பிரதிவாதி கொடுக்க தயாராக உள்ளார் என்றும், நான் தான் வாங்க மறுக்கிறேன் என்றால் சரியல்ல. என் மாமனார், மாமியார் மற்றும் பிள்ளைகள் முன்னிலையில் வாய்மொழி பாகம் ஏற்பட்டு கூர் சீட்டு படி அந்தந்த பாகஸ்தர்கள் அவரவர் சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

முதன்மை வாக்குமூலம் நான் சொல்லி தான் எழுதப்பட்டது. என்னுடைய வாக்குமூலத்தில் சொல்லியுள்ள ஆவண எண்கள் மற்றும் தேதி எனக்கு தெரியாது. எனக்கு அனைத்து விவரங்கள் தெரியும் என்பதால் தான்

ஆவண எண்கள் உள்பட அனைத்து விவரங்களையும் என் முதன்மை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

எங்கள் குடும்பத்தில் ஏற்கனவே பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வாய்மொழி பாகத்திற்கு பிறகு நாங்கள் எப்போதும் சொத்துக்களை ஒன்றாக அனுபவித்ததில்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- மகாலட்சுமி

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.